பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி　　வியாழன் வெளியீடு.

போர் 1. | பொள்ளாச்சி. 21-6-51. விலை அரையணா. | வெற்றி

கோவை ஜில்லா காங்கிரஸ் ஊழியர்கள் மகாநாடு.

கோவை ஜில்லா காங்கிரஸ் ஊழியர்கள் மகாநாடு ஜுலை மாதக்கடைசியில் நடைபெறும். ஷை மகாநாட்டில் கோவை ஜில்லாவில் வரப்போகும் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் மகாசபைக்கு அமோக வெற்றி கிடைக்கும்படி செய்வதற்குண்டான திட்டங்களையும் இந்த ஜில்லாவில் இருந்து வரும் எல்லா அரசியல் தியாகிகளுக்கும் உடனடியாக சர்க்காரால் நிலம் அளிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்பதுபற்றி ஒரு இறுதியான திட்டம் வகுப்பதுபற்றியும் யோசிக்கப்படுவதுடன் இன்னும் பல முக்கியமான தீர்மானங்களும் மகாநாட்டின் நிகழ்ச்சிகளில் இடம் பெறவிருக்கிறது.

ஷை மகாநாட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ கே. காமராஜ, ஆந்திரமாகாண காங்கிரஸ் கமிட்டித்தலைவரும், மாஜி மந்திரியுமான ஸ்ரீ என் சஞ்சீவி ரெட்டியார் அவர்களும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுக்காரியதரிசி ஸ்ரீ காளாவெங்கட்டராவ் அவர்களும் கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டி மெம்பர் ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள் எம். எல். ஏ. ஆகியவர்களும் இன்னும் பல மந்திரிகளும் தலைவர்களும் கலந்துகொள்வார்கள்.

மகாநாட்டின் விஷயமாக கடிதப்போக்குவரத்துகள் வைத்துக்கொள்ள விரும்புபவர்கள் பி. எஸ். வேலுசாமி, காங்கிரஸ் ஊழியன் பொள்ளாச்சி என்ற விலாசத்திற்கு எழுதவும். இடம் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர் பிரயாணம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் 17—6—51 முதல் 22—6—51 வரை சேலம் ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார். 23-ல் ஆம்பூர், 24-ந் தேதி கோவைடவுன் அரசியல் மகாநாடு, மாலையில் கோபியில் பொதுக்கூட்டம், 25-ந் தேதி கோவை தாலூக்காவில் பிர்க்காமகாநாடுகள், மாலையில் தொழிலாளர்கள் சந்திப்பு, 26-ந்தேதி பொள்ளாச்சி டவுன் அரசியல் மகாநாடு, 27, 28-ந்தேதிகளில் சிவகாசி, 29-ல் புதுக்கோட்டை, 30-ந் தேதி சென்னை சேர்வார் எனத்தெரிகிறது.

பொள்ளாச்சி டவுன் அரசியல் மகாநாடு.

26—6—51 செவ்வாயன்று தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் தலைமையில் நடைபெறும். மகாநாட்டில் ஸ்ரீ டி. எஸ். பட்டாபிராமன் எம். எல். ஏ., திருக்கோயிலூர் ராஜகோபால், சென்னை அனந்தநாயகி மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

சூதாடியவர்கள் பிடிபட்டனர்.

15—6—51 ல் பொள்ளாச்சி போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ லக்ஷ்மண பெருமாள் நாயுடு அவர்கள் ஒரு பெ... போலீஸ் கோஷ்டியுடன் சென்று மே... ராபுரம் கிராமத்திற்கு அருகில் ஒரு க... டுச்சாலையில் சூதாடிக்கொண்டிருந்த ... பேர்களையும் ரொக்கமும் சீட்டுக்கட்டு... வகைபறுக்களையும் கைப்பற்றினர்க... ஷை எதிரிகளுக்கு கோர்ட்டில் தலா 1... ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்...

கலப்படம் செய்தவர்களுக்கு அபராதம்.

16-6-51 ல் கலப்படம் செய்து க... & டி விற்றதற்காக பிரபல சந்தை வ... பாரிகளான ஜனாப் அப்துல்ராஜாக், ம... முகம்மது என்பவர்களுக்கு இந்த ... ஸ்டேஷனரி சப் மாஜிஸ்டிரேட் ஸ்ரீ ... ப்பா பி. ஏ. பி. எல். அவர்களால் தலா 80, 115 அபராதம் விதிக்கப்பட்... நம் நகர சுகாதார அதிகாரி ஸ்ரீ என். ... விஸ்வநாதன், சேனிட்டரி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ என். எம். உண்ணி அவர்கள் கைப்பற்றிய ஷை கலப்படமுள்ள காபி... டையை அழித்து விடும்படி மாஜிஸ்டிரே... உத்திரவிட்டார்.

இளைஞர் காங்கிரஸ் ஆபீஸ் திறப்புவிழா.

ஞாயிறு மாலையில் இமாம்கான் வீதியிலிருக்கும் இளைஞர் காங்கிரஸ் காரியாலயத்தை ஸ்ரீ பி. ஆர். கந்தசாமிக்கவுண்...

(இரண்டாம் பக்கம் பார்க்க)

உயர்ந்த மருந்துகள்!　　நிர்ணயமான விலை!!

உங்களுக்கு சேவை செய்வதே எங்களின் கருத்து!!!

சகல விதமான இங்கிலீஷ் மருந்துகளும், ஆயுர்வேத மருந்துகளும் மிகவும் சரசமான விலையில் நம்பிக்கையோடு கிடைக்குமிடம்.

எல். எஸ். மணி & கோ.,

இங்கிலீஷ் மருந்து ஷாப், கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ்,

தேர்முட்டி வீதி,　　பொள்ளாச்சி.

குறிப்பு:— டாக்டர் பிரெஸ்கிரிப்ஷன்களுக்கு [சீட்டுகளுக்கு] தேர்ச்சிபெற்றவரால் 24-மணி நேரமும் எங்களிடம் கிடைக்கும்.

..க்கு மிகுந்த தமிழ்
வாரப்பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 21—6—51. வியாழன்.

இவர்களும் தேசபக்தர்கள் தான்!

சென்னையில்நடந்த த. நா. கா. க. கூட்
க்தில் வரப்போகும் தேர்தலுக்கு அபே
சகர்களை எடுக்க 7-பேர்கள் கொண்ட
..ஹராக் கமிட்டி, ஏகமனதாகத் தேர்ந்
நடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில்
..க்த போட்டியிருக்கும் எனக்கருதி
ல்லா மெம்பர்களும், பெறப்பான்மை
ன ஊழியர்களும் காங்கிரஸ்காரர்களும்
ஜயம் செய்திருந்தனர். ஆனல் தலைவர்
.. காமராஜ் காட்டிய பெருந்தன்மையி
ல் போட்டி தவிர்க்கப்பட்டது. தேர்தல்
மனதாக நடைபெற்றது.

ஸ்ரீ ஒ. பி. ஆர். ரெட்டியாரின் பெயர்
..ரேபிக்கப்பட்டதும் தலைவர் ஸ்ரீ காம
ஜ அவர்கள் ரெட்டியாரின் சம்பதம்
ல்லை என்றம், கமிட்டியில் அவர் இரு
மாட்டார் என்றம் சொன்னர். ஆனல்
.. சி. சுப்ரமணியம், தான் பொருப்பெ
றம், அவரைக்கமிட்டியில் இருக்கும்
.. செய்வதாகவும் கூட்டத்தில் பொருப்
பற்றக்கொண்டார். ஆனல் இப்போது
..ட்டியார் ராஜீநாமா செய்து விட்டார்.
..மிழ்நாடு காங்கிரஸில் ஊழல் மலிந்துவி
..டதாகவும் அதைப்போக்க வேண்டுமெ
றம் இந்தக்கூட்டம் கூப்பாடு போட்
து. ..ட்டம் கூடினர்கள், தூது அனுப்
னர்கள், சமரசம் பேசினர்கள் என்னெ
னமோ செய்து தேர்தல் கமிட்டியில்
வர்கள் கோஷ்டியில் மூவர் வந்தார்கள்.
வர்களின் உண்மையான நோக்கம் ஊழ
..ப்போக்குவது அல்ல. தேர்தலில் எம்.
ல். ஏ ஸ்தானங்களையும், மந்திரி பதவி
ளையும் கைப்பற்றுவதுதான் இவர்கள்
..ாக்கம் கோவை ஜில்லாவிற்கு ஒரு மந்
..ரி கொடுக்கலாம் அது ஸ்ரீ அவினஷிலி
மா? சி. சுப்ரமணியமா? வி. சி. பி. கவு
..டரா? நீங்களே முடிவு செய்து சொல்
..ங்கள் என்றல் இவர்களின் கோஷ்டி
..க்தனை பாகமாய்ப் பிரியப்போகிறது என்

பது க..வுளுக்குத்தான் தெரியும்.

இந்தப் பதவிப் பிரியர்கள் எப்படியும் எம். எல். ஏ. யாக வேண்டும். மந்திரியாக வேண்டும். இதற்காக எந்தத்தியாகமும் செய்யத் தயாருயிருக்கின்றனர் இந்த உத்தம தேசபக்தர்கள். இவர்களை நம்பி ரெட்டியார் வந்தால் அவரை எந்த ஆற்றில் விட்டுவிடப்போகிருர்களோ தெரியவில்லை. ஏதோ சொந்த அலுவல்களையாவது ஒழுங்காய் கவனித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ சி. பி. சுப்பையாவை வேறு இழுத்துக்கொள்கிருர்கள். அவரைத் தேர்தலில் நிற்க வைத்து மூக்கு அறபடவைத்ததும் அல்லாமல், இப்போது தேர்தல் கமிட்டியில் வேறு போட்டு பின்னல் திட்டப் போகிருர்கள். இம்மாதிரி பதவிப்பிரியர்கள் பதவிக்காக எவ்வித தியாகமும் செய்யத்தயாருயிருக்கும் தியாக மூர்த்திகள், மந்திரிப்பதவி கிடைக்கவில்லை என்றல் சமுத்திரத்தில் விழுந்துவிடுவேன் என்று உயிரையும்விட தயாருயுள்ள உத்தமர்களும் நமது கோவை ஜில்லாவில் அதிகம். இவ்வித தியாக மூர்த்திகளுக்காக நாம் அனுதாபப்படுகிறேம். எப்படியும் வீண் கூச்சல் போட்டு எம். எல். ஏ. ஆகிவிடலாம் என்று சில படித்தபட்டப்பெற்றமேதாவிகள் நினைக்கின்றனர். முயற்சி செய்கின்றனர். இதற்கு ஊழியர்கள் ஏமாந்த சோணகிரிகள் அல்ல என்பதைக்காட்டவேண்டும். இந்தப்பதவிப் பிரியர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும். அதற்குச்சமயமும் சந்தர்ப்பமும் காத்திருக்கிறது. வெறும் பூச்சாண்டிகாட்டி எம். எல் ஏ. ஆகிவிட முயற்சிசெய்யும் பக்தர்களுக்கும், பண மூட்டைகளுக்கும் சரியான பாடம் கற்பிப்போம்.

(முதல் பக்கம் தொடர்ச்சி)

எம். எல். ஏ. அவர்கள் தலைமை வகித்து திறப்பு விழாசெய்தார். ஸ்ரீ நா. மகாலிங்கம் அனைவரையும் வரவேற்ருர். நகர காங்கிரஸ கமிட்டித்தலைவர் எம். ராமசாமிக்கவுடர், ஸ்ரீ ஜே. எஸ். கிருஷ்ணராவ், ஸ்ரீ பி. எஸ். சுப்பையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஆ. முத்துசாமி நன்றி கூற விழா இனிது முடிந்தது.

பொள்ளாச்சி நகர ஐக்கிய வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம்.

இந்நகர் ஐக்கிய வர்த்தக குமாஸ்தாக்களின் நான்காவது மகாநாடு பொள்ளாச்சி பக்வான் டாக்கீஸில் சென்னை மாஜி தொழிலாளர் மந்திரியும் தொழிலாளர் தலைவருமான திரு: வி. வி. கிரி அவர்கள் தலைமையில் 1--7--51 ல் நடைபெறும். அம்மகாநாட்டில் சென்னை சே. எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களும், கோவை ஜில்லா போர்டு சோஷலிஸ்ட் அங்கத்தினர் திரு. பி. வி. கந்தசாமி அவர்களும் கலந்துகொள்வார்கள்.

நேயர் தபால்.

நம் நகரிலுள்ள சில காபிக்கிளப்புகளில் சுகாதாரம் சரியாகஇல்லாமலிருக்கிறது. சாப்பிடுவதற்கு பொரச இலை என்னும் இலை என்னும் இலைகளில் உண்பதற்கு பதார்த்தங்கள் வைத்துக்கொடுக்கிருர்கள். அதில் புழு, பூச்சிக்கூடுகள். இன்னும் அழுக்குமிருக்கிறது அப்படியே சுத்தம் செய்யாமலே கொடுக்கிருர்கள். இது சுகாதாரத்திற்கு நேர் விரோதமாய் இருக்கிறபடியால் இதை சுகாதார அதிகாரிகள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

[பி. எம். என். சாமி.]

பொள்ளாச்சி மோட்டார் தொழிலாளர் சங்கம்.

16--6--51 ல் சனிக்கிழமை இரவு ஒற்றுமைநிலையத்தில் திரு. எம். சுப்பையா கவுண்டர் தலைமையில் ஹிந்த் மஸ்தூர் சபாவுடன் இணைந்திருக்கும பொள்ளாச்சி மோட்டார் தொழிலார்களின் வருடாந்திர மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. 31--3--51 லயுடன் முடிவடைந்திருக்கும் ஆடிட் செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன. புதுவருடத்திற்கு கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர். எம். சுப்பையா கவுண்டர்;
உபதலைவர்கள்: ஏ. ராமசாமி ஆசாரி.
டி. ஜெ. ஜெபமணி.
பொக்கிஷதார்: எஸ். கிருஷ்ணசாமி.
காரியதரிசி. ஆர். கிருஷ்ணன்:
உபகாரியதரிசிகள்: சி. ஆர். சுப்ரமணியன்:
பி. என். சண்முகம்.
மற்றும் 16-பேர்கள் கமிட்டி மெம்பர்கள்.

சங்கத்திற்கு ஒரு ஜெனரேட்டரும், ஒரு டைப்ரைட்டரும் வாங்குவது என்றும், பொள்ளாச்சிக்கு ஒரு தனி லேபர் ஆபீஸரை நியமிக்குமாறு கேட்டுக்கொண்டும் இருதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் வளர்ச்சி பற்றியும், வருங்கால வேலைத்திட்டங்களைப்பற்றியும் தலைவர் எம். சுப்பையா கவுண்டர், மாஜிகாரியதரிசி கோ. கோபால், புதுக்காரியதரிசி ஆர். கிருஷ்ணன் ஆகியவர்கள் பேசியபின் வந்தனோபசாரத்துடன் மகாசபைக் கூட்டம் முடிவுற்றது.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

தரத்தில் உயர்ந்தவை.
வெண்புரு பீடிகள்.

S. P. M கொடிமஜீத்பீடி.
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: ஏ. ஓ. ஏ. செட்டியார்.

P பட்டாபி செட்டியார்,
ஜெனரல் மர்ச்சண்ட்,
கடை வீதி.

S. R. V. லாட்ஜிங்கில்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்ட
முள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்

தினமணி & கதிர்
கிடைக்குமிடம்
ஜகதீஸ் & கோ., கடை வீதி.

நீங்கள் சந்தித்தீர்களா.........?
டாக்டர் V. T. சாமுவேல் M.R.C.M.
விநாயகர் கோவில் வீதி, பொள்ளாச்சி.

கண்டியம்மன் கம்பெனி,
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார் ஆயில் எஞ்ஜின், பம்பு
செட்டுகள் எலக்ட்ரிக் சாமான்கள்,
மற்றும் மெஷினரி சாமான்களும்
குறைந்த விலையில் எங்கள்
கம்பெனியில் கிடைக்கும்.
உரிமையாளர்:—
C. ரங்கசாமி கவுண்டர்.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. விக்கும், 20-வயதுக்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:- S. R. Chandran.

கேள்வி—பதில்.

கே:— மகாத்மா காந்திஜீயின் அடிப்படைக் கொள்கையான குடிசைத்தொழிலுக்கு முதல் ஸ்தானம் அளித்து அபிவிருத்திசெய்வோம் எனக்கூறிய நமது ஆட்சியாளர்கள் இன்று நாலுங்காக சாத்வீக முறையில் போராடும் நெசவுத்தொழிலாளர்களின் மீது அடக்குமுறையை அள்ளி வீசுவதின் காரணம் என்ன? இது நேர்மையா? இதுதான் காந்தீயமா?

(என். நாராயணன்.)

ப:— உண்மையில் நெசவாளர்கள் சாத்வீக முறையில் தான் போராடினார்கள். ஆனால் அவர்களுடன் சிலசுயநலக்கும்பல் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்ததால் தான் அடக்குமுறை செய்ய நேர்ந்திருக்கும். சும்மா இருப்பவர்கள்மீது அடக்குமுறை செய்யமுடியுமா என்று சற்று சிந்தித்துப்பாரும்.

கே:— பொள்ளாச்சியில் எத்தனை மின்சாரக் கம்பங்கள் இருக்கின்றன?

ஜவஹர்லால் நேருவினுடைய பட்டப்பெயர்தானே? அவருடைய தாய் தந்தையர் வைத்த பெயர் என்ன?

கம்யூனிஸ்ட், திராவிடம், காங்கிரஸ் இவைகளில் எது வெற்றி அடையும்?

(ரா. சண்முகம்.)

ப:— வாசியின் 26-4-51 தேதி 11-ம் தேதி இதழ் பாரும்.

ஜவஹர்லால் நேருதான்.

சிங்கம் ஜெயிக்குமா? சிறுநரிகள் வெற்றியடையுமா? என்பதுபோல் இருக்கிறது கேள்வி. காங்கிரஸ்தான் வெற்றியடையும்

பொதுக்கூட்டம்.

18-ல் திங்கள் மாலையில் மயிலஞ்சந்தையில் ஸ்ரீ பி. டி. சென்னப்ப கவுடர் தலைமையில் காங்கிரஸ பொதுக்கூட்டம் நடைபெற்றது. கோவை டி. பி. ராமசாமி பவர்னி ராஜகோபால், திண்டுக்கல் ஆர். எஸ். மணிபாரதி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

தேர்தலில் போட்டி.

வரப்போகும் பொதுத்தேர்தலில் பார்வேடு பிளாக்கட்சியின் சார்பில் கோவை ஜில்லாவில் சில ஸ்தானங்களில் போட்டியிடுவார்களெனத் தெரிகிறது.

முதியோர் கல்வி.

2-வது வார்டு முதியோர் கல்விபள்ளியில் தா. மு. க. கமிட்டியாரால் சனி இரவு ஒரு கூட்டம் ரேஞ்சு டெப்டி இன்ஸ்பெக்டர் பால் ஜேசுதாசன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமிராஜா, பி. சண்முகசுந்திரம், மணியன் இவர்கள் முதியோர் கல்வி என்பதுபற்றியும் தமிழ் பண்டிதர் ஸ்ரீ சிவகுருநாத பிள்ளை வ. உ. சிதம்பரம் பிள்ளையைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். ஷை பள்ளி ஆசிரியர் ஸ்ரீ பி. எஸ். கந்தசாமி வரவேற்புக் கூறினார். ஸ்ரீ சுப்ரமணியத்தேவர் நன்றி கூறினார்.

டவுன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்.

ஷை ஸ்டோர்ஸின் போர்டு கூட்டம் இம்மாதம் முதல் தேதியில் நடைபெற்றது. அதுசமயம் அண்மையில் சென்னையில் நடைபெறவிருக்கும் 8-வது தமிழ்நாடு கூட்டுறவு மகாநாட்டிற்கு பிரதிநிதியாக ஷை ஸ்டோரின் டைரெக்டரும் கவுன்சிலருமான ஸ்ரீ பி. எஸ். சுப்பையன் அவர்களை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஜெயப்பிரகாஷ் வாலிபர் சங்கம்.

17—6—51 காலையில் ஷை சங்கக்கூட்டம் ஸ்ரீ பி. எஸ். ராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் எஸ். சின்னத்துரை, பி. ராமநாதன் ஆகியோர் ஸ்ரீ லோகியா கைது செய்யப்பட்டதைப்பற்றி பேசினார்கள். தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

விளம்பர விகிதம்.

"பொள்ளாச்சி வாசி"யின் சர்க்குலேஷன் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போவதாலும் நியூஸ் பிரிண்ட் விலை அதிகரித்துவிட்டதாலும் விளம்பர விகிதம் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பக்கம் தடவைக்கு		ரூ. 60...0...0
அரைப்பக்கம்	,,	ரூ. 30...0...0
கால்பக்கம்	,,	ரூ. 15...0...0
ஒரு காலம்	,,	ரூ. 20...0...0
ஒருகாலத்தில் ஒருஅங்குலம்		3—0—0

நடுரோடில் நடவாதீர்கள்.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:
P. A. ரஹீம் சாயபு,
பல்லடம்.

ஏஜண்ட்:
A. K. யாகூப் சாயபு,
பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி
உபயோகியுங்கள்.

போன் நெம்பர். 63.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார்
& பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.